இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி சிறப்பு நிகழ்ச்சித்திட்டம் (இயற்கை விஞ்ஞானம்) - 2022/2023

மட்டம் - 05

இறுதிப்பரீட்சை – 2022/2023

**STU6410– கட்டிளமைப்பருவத்தினருக்கான உளவியல்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 22.11.2023 நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30

பகுதி **I** இன் சகல வினாக்களுக்கும் பகுதி **II** இன் எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

## பகுதி – I

1. கட்டிளமைப்பருவத்தினரிடம் விருத்தியடைந்துள்ள அறிகைசார் இயலுமைகள் ஐந்தினை (05) பட்டியற்படுத்துக.
2. கட்டிளமைப்பருவத்தினரின் உயிரியல்சார் விருத்தியின் அடிப்படைகளைச் சுருக்கமாக விளக்குக.
3. "இரண்டாம் நிலை பாலியல் பண்புகள்" என்பதனால் கருதப்படுவது யாதென ஆண் மற்றும் பெண்பாலாரில் ஒவ்வொருவருக்கும் இரண்டு (02) உதாரணங்களை வழங்கி விவரிக்குக.
4. றொபர்ட் ஹாலிங்கேர்ஸ் (1972) முன்வைத்துள்ளதன்படி கட்டிளமைப்பருவத்தினரின் விருத்திகள் ஐந்தினை (05) பட்டியற்படுத்துக.
5. கட்டிளமைப்பருவத்தின் போது ஏற்படும் மனவெழுச்சியின் விருத்திப் பண்புகள் இரண்டினை (02) சுருக்கமாக பரிசீலனை செய்க.
6. "அல்பிரட் பண்டூரா முன்வைத்துள்ள அணுகுமுறைக்கு அமைவாக சமூக இடைவினையானது ஆளுமை விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணிகளில் ஒன்றாகும்." சமூகக் கற்றல் அணுகுமுறையின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு கட்டிளமைப்பருவத்தினருடன் தொடர்புபடுத்தி இரண்டு (02) அம்சங்களை மையப்படுத்தி மேற்படி கூற்றினை நியாயப்படுத்துக.
7. கட்டிளமைப்பருவத்தினரின் ஆளுமை விருத்திக்குப் போதைப்பொருள் துஸ்பிரயோகம் தடையாக அமையக் கூடிய இரண்டு (02) வழிமுறைகளைப் பகுப்பாய்வு செய்க.
8. கட்டிளைஞர்களின் இரண்டு (02) சமூக ஆர்வங்களை சுருக்கமாக விபரிக்குக.

**(05 x 08 = 40** புள்ளிகள்)

## பகுதி – II

9. "மனவெழுச்சிகள் கட்டிளமைப் பருவத்தினரின் விருத்தியில் ஒரு ஒருங்கிணைந்த பங்கினை வகிக்கின்றது."

   i. கட்டிளமைப் பருவத்தினரின் பொதுவான மனவெழுச்சிக் கோலங்கள் இரண்டினை (02) விளக்குக.

   **(04** புள்ளிகள்)

   **ii.** கட்டிளமைப் பருவத்தினரின் சமூக விருத்தியில் எவ்வாறு மனவெழுச்சிகள் செல்வாக்குச் செலுத்தும் என விளக்குக.

   **(06** புள்ளிகள்)

   **iii.** கட்டிளமைப் பருவத்தினரின் மனவெழுச்சிப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு வகுப்பு ஆசிரியர் எவ்வாறு உதவலாம் என்பதற்கு குறைந்தபட்சம் மூன்று (03) உபாயங்களை முன்வைத்து பரிசீலிக்குக.

   **(10** புள்ளிகள்)

10. "கட்டிளமைப் பருவத்தின் போது உருவாகும் சுதந்திரத்திற்கான தேவை அறிகைசார் விருத்தியில் முக்கியமானதொன்றாகும்."

**i.** கட்டிளமைப் பருவத்தினருக்கு ஏன் சுதந்திரமாக இயங்குதல அவர்களுக்கு ஏன் முக்கியமானது என்பதைச் சுருக்கமாகப் பகுப்பாய்வு செய்க.

**(04** புள்ளிகள்)

**ii.** இலங்கையின் சூழமைவுடன் தொடர்புபட்டதாக மேற்படி தேவை எவ்வாறு கட்டிளமைப் பருவத்தினருக்கும் அவர்களுடைய பெற்றோர்களுக்கும் இடையில் முரண்பாடுகள் தோன்றுவதற்கு இட்டுச் செல்கின்றன என விளக்குக.

**(06** புள்ளிகள்)

**iii.** பெற்றோர்கள் கட்டிளமைப் பருவத்தினரின் சுதந்திரத்திற்கு எவ்வாறு உதவலாம் என மூன்று (03) உபாயங்களை வலியுறுத்துவதனூடாக பரிசீலிக்குக. **(10** புள்ளிகள்)

11.

**i.** ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கணத்தின் துணையுடன் "ஆளுமை" எனும் எண்ணக்கருவினை விளக்குக.

**(04** புள்ளிகள்)

**ii.** கட்டிளமைப்பருவத்தினருடைய "சுய– எண்ணக்கரு" மற்றும் அவர்களுடைய ஆளுமை என்பவற்றுக்கிடையிலான தொடர்பினை சுருக்கமாக விபரிக்குக.

**(06** புள்ளிகள்)

**iii.** கார்ள் றொஜர்ஸ் முன்வைத்த கருத்துக்களை பாடசாலை நிருவாகத்தினர் எவ்வாறு கட்டிளமைப் பருவத்தினரிடத்தில் சுய – எண்ணக்கருவினை விருத்தி செய்வதற்கு வசதி செய்வதற்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம். **(10** புள்ளிகள்)

12.

**i.** "மனிதனின் வாழ்வுக்காலத்தில் கட்டிளமைப்பருவமானது ஒரு விசேட பருவமாக இனங்காணப்பட்டமை ஒப்பீட்டடிப்படையில் ஒரு புதிய சமூக தலையீடாகும்." மனித வாழ்வில் கட்டிளமைப்பருவமானது ஒரு முக்கியமான பருவம் என்பதை இனங்காண்பதற்கு இட்டுச்செல்லும் இரண்டு (02) காரணிகளை சுருக்கமாக விளக்குக.

**(04** புள்ளிகள்)

**ii.** கட்டிளமைப்பருவத்தைச் சேர்ந்த ஒருவரிலும் ஒரு பிள்ளைப் பருவத்தைச் சேர்ந்தவரிலும் வெளிப்படும் தன்முனைப்புச் சிந்தனையின் இயல்புகளை ஒப்பிடுக.

**(06** புள்ளிகள்)

**iii. A)** ஒரு கட்டிளமைப்பருவத்தைச் சேர்ந்தவரது தன்முனைப்புச் சிந்தனையால் உருவாகக் கூடிய இரண்டு (02) பிரச்சினைகளைக் குறிப்பிடுக.

**(1 x 2 = 2** புள்ளிகள்)

**B)** நீங்கள் மேலே III – A பகுதியில் குறிப்பிட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்குப் பெற்றோர்கள் எவ்வாறு உதவலாம் என பரிசீலனை செய்வதோடு, அதற்காகப் பயன்படுத்தக் கூடிய குறிப்பான இரண்டு (02) உபாயங்களையும் விளக்குக. **(08** புள்ளிகள்)

13.

i. ஒரு ஆசிரியர் என்ற வகையில் நீங்கள் உங்களுடைய கட்டிளமைப் பருவ மாணவர்களிடத்தில் விருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கும் நான்கு (04) மனப்பாங்குகள் மற்றும் விழுமியங்களைப் பட்டியற்படுத்துக.

**(1x4 = 4** புள்ளிகள்)

ii. கட்டிளமைப்பருவ மாணவர்களிடத்தில் அந்த மனப்பாங்குகள் மற்றும் விழுமியங்களை விருத்தி செய்யும் போது நீங்கள் முகங்கொடுக்கக் கூடிய சவால்கள் நான்கு (04) பற்றி கலந்துரையாடுக

**(3 x 2=06** புள்ளிகள்)

iii. மேலே பகுதி II இல் நீங்கள் குறிப்பிட்ட சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கு ஆசிரியர் என்ற வகையில் நீங்கள் பின்பற்றும் உபாயங்களை பரிசீலனை செய்க. ஒவ்வொரு சவாலுக்கும் குறைந்தபட்சம் ஒரு (01) உபாயத்தினை முன்வைக்குக.

**(5 x 2 = 10** புள்ளிகள்)

பகுதி **– II 20 x 03 = 60** புள்ளிகள்

மொத்தம் = 100 புள்ளிகள்

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -